JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# புறநானூற்றில் சொல்லாக்க விகுதிகளும் ஆக்கப்பாடும்

முனைவர் **தி.அ. இரமேஷ்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்

**முன்னுரை**

ஒரு சமூகத்தின் மிக முக்கியமான அடையாளம் மொழி. அம்மொழியின் வளர்ச்சி வரலாறு அந்தச் சமூகத்தின் வளர்ச்சி நிலைகளை எடுத்துக்கூறும் மிகச் சிறந்த ஆவணம். அப்படியான மொழியில் சொற்களின் வளர்ச்சி பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக நிகழ்ந்து வருகின்றன. அச்சொற்களை ஆக்கிப் பயன்படுத்தும் முறை சங்ககாலம் தொடங்கி இன்று வரை தொடர்ந்து ஆக்கத்தன்மையுடன் வழக்கில் உள்ளது. தற்காலத்தில் சொற்களை ஆக்கிப் பயன்படுத்துதல் என்பது தனித்ததொரு துறையாகச் 'சொல்லாக்கம்' எனும் பெயரில் வளர்ச்சி பெற்றுள்ளது.

சொல்லாக்கம் பல்வேறு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு ஆராய்ந்து வகைப் படுத்தப்பட்டாலும், சங்க காலத்தில் திரிபு, ஆக்கப்பாடு (மொழியியல், சொல்லியல், பெயரியல், பக். 22-23) ஆகிய இரு பிரிவுகளில் சொல்லாக்கம் நிகழ்ந்துள்ளதை அறிய முடிகின்றது. இதில் திரிபு என்பது இலக்கண அடிப்படையில் உருவாவது. ஆக்கப்பாடு பொருள் மாற்ற அடிப்படையில் நிகழ்வது. சங்க இலக்கியத்தில் கூட்டுச்சொற்கள், பிறமொழிச் சொற்கள், விகுதிவழிச் சொற்கள் என்ற மூன்று நிலைகளில் காணமுடிகிறது. இவை மூன்றும் ஆக்கப்பாடு என்ற வகையில் அடங்கும். விகுதிவழிச் சொற்கள் என்ற வகையில் புறநானூற்றில் நிகழ்ந்துள்ள சொல்லாக்கச் சொற்களைத் தொகுத்து நோக்கி, அவை சங்க காலத்தில் சொற்கள் ஆக்கப்பாட்டிற்குப் புறநானூற்று ஆக்க விகுதிகள் எவ்வாறு துணை நின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**ஆக்க விகுதிகள்**

பெயர், பெயரடி, வினை, வினையடிகளுடன் விகுதிகள் சேர்ந்து சொற்கள் உருவாக்கம் பெறுகின்றன. அவற்றின் அடிப்படையில் சொல்லாக்கச் சிந்தனையில் ஈடுபட்ட ச. அகத்தியலிங்கம் அவர்கள் ஆக்க விகுதிகளாக அருவத்தை, ஐ, அகம், அம், அல், அவு, இ, உள், கை, க்கை, சி, ச்சில், ச்சி, தி, பு, ப்பு, ம், மை, வை, வல், வி, வு, அர், அரை, ஆர், காடு, ட்டம், ட்டு, டு, டை, ப்பை, வாய் எனும் 33 விகுதிகளைச் சங்க இலக்கியங்களில் ஆக்க ஒட்டுக்களாக இடம்பெற்றுள்ளதாகச் சுட்டுகிறார் (மொழியியல், சொல்லியல், பெயரியல், பக்.145-148). இவ்விகுதிகள் வழிச் சங்க இலக்கியத்தில் சொல்லாக்கம் பரவலாக நடைபெற்றுள்ளன. அதில் புறநானூற்றில் நிகழ்ந்துள்ள விகுதிவழி ஆக்கச் சொற்களைக் காணலாம்.

மேற்காணும் விகுதிகளைக் கொண்டு புறநானூற்றில் நிகழ்ந்துள்ள விகுதிவழிச் சொற்களை நோக்கும்பொழுது இருபதுக்கும் மேற்பட்ட விகுதிகள் சொல்லாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. இவ் விகுதிகளை இரு பிரிவுகளில் பகுத்துக் காணமுடிகிறது. அவை பெயர்ச் சொற்களுடன் சேரும் விகுதிகள், வினையடியுடன் சேரும் விகுதிகள் என்பன.

**பெயர்ச் சொற்களுடன் சேரும் விகுதிகள்**

அகம், அம், அர், அல், அன், ஆள், ஆளர், இ, இர், இயல், கு, ச்சி, ஞர், ஞை, தி, த்தி, ப்பு, மார், மை, வி, வு, வை ஆகிய இருபத்திரண்டு விகுதிகள் பெயருடன் சேர்ந்து சொற்கள் ஆக்கம் பெருவதற்குத் துணை நிற்கின்றன.

**அகம் விகுதி**

அகம் என்பதற்கு வீடு, மனம், ஞானம், உள் எனப் பல பொருள்கள் உள்ளன. ஆனால் இச்சொல் ஒரு சொல்லின் முன் அல்லது பின் என்னும் இருநிலைகளில் சொல்லாக்கத்தில் இணைந்து செயல்படுகிறது. முன்னொட்டாக விளைவாக்கம் இல்லை. ஆனால் பின்னொட்டாக அதிக விளைவாக்கம் பெற்றுள்ளது. இடம் என்ற பொதுப்பொருளில் அதிகப் பயன்பாடு உடையது குறிப்பிடத்தக்கது. அகம் ஒரு முழு சொல்லாக இருப்பினும் மீண்டும் மீண்டும் விகுதி போல் செயல்பட்டு புதிய சொற்களை உருவாக்கப் பயன்படுகிறது என்று இ. மறைமலை குறிப்பிடுகின்றார்.

புறநானூற்றில் காழ் + அகம் > காழகம் (ஆடை) (புறம்.41:9) என்ற சொல் அகம் ஆக்கப் பெயர் விகுதி பெற்று உருவாக்கம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. இவ்விகுதி சங்க காலத்தில் அதிகப் பரவலாக்கம் பெற்ற விகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

**அம் விகுதி**

‘அம்’ என்னும் விகுதி குறித்துத் தொல்காப்பியரும் (தொல்.சொல்.204) நன்னூலாரும் (நன்.140) குறிப்பிட்டுள்ளனர். ‘அம்’ விகுதி பெற்று ஆக்கம் பெற்ற சொற்களை இரண்டு

வகையான இயல்பு கொண்டவையாகப் பார்க்கலாம். அவை வினை, பெயரடிகளுடன் சேர்ந்து புதிய சொற்களை உருவாக்குதல், பொருள் மாற்றம் இல்லாமல் ‘அம்’ விகுதி பெற்று வருவன (பகுதிப் பொருள் ஏற்பவை) என்பன.

புறநானூற்றில் உள்ள சொற்களைத் தொகுத்து ஆராயும் பொழுது பகுதிப்பொருள் ஏற்கும் ஆக்க நிலைகளில் ‘அம்’ விகுதி சேர்க்கையால் சொல்லாக்கம் நிகழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. இதனடிப்படையில் பதினைந்திற்கும் மேற்பட்டச் சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன. அவற்றில் சில சொற்களைச் சான்றுகளாக நோக்கலாம்.

அகல் + அம் > அகலம் (அகற்சி) (புறம்.2:7)
அவை + அம் > அவையம் (சபை) (புறம்.71:7)
எருக்கு + அம்> எருக்கம் (எருக்கு) (புறம்.106:2)
நறவு + அம் > நறவம் (மது) (புறம்.292:1)
பொதி + அம் > பொதியம் (மலை) (புறம். 2:24)

ஆகிய சொற்களும் பொருள் மாற்றம் இன்றி பகுதியின் பொருளையே உணர்த்தி நிற்கின்றன. செய்யுளின் யாப்பமைதி குன்றா வண்ணம் அவ்வகை ஆக்கம் நிகழலாம் என ஒருவாறு ஊகிக்க இடமளிக்கின்றது. புறநானூற்றில் அதிக விளைவாக்கம் கொண்ட விகுதி ‘அம்’ என்பது குறிப்பிடத்தக்கது.

**அர் விகுதி**

தொல்காப்பியரும் (தொல்.சொல்.208) நன்னூலாரும் (நன்.140) ‘அர்’ என்பதைப் படர்க்கை பன்மை வினைமுற்று ஈறு என்று குறிப்பிடுகின்றனர். ஆனால், சொல்லாக்க விகுதியாகச் புறநானூற்றில்

அமர் + அர் > அமரர் (தேவர்) (புறம்.55:3)
தெவ்வு + அர் > தெவ்வர் (பகைவர்) (புறம்.6:11)
தெறு + அர் > தெறுவர் (பகைவர்) (புறம்.307:9)
உமண் + அர் > உமணர் (உப்பு வணிகர்) (புறம்.84:6)

ஆகிய சொற்கள் ‘அர்’ விகுதி சேர்ந்து ஆக்கம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

**அல் விகுதி**

தொழிற்பெயர் விகுதிகளில் ஒன்றாக நன்னூலார் ‘அல்’ விகுதியைக் குறிப்பிடுகின்றார். சொல்லாக்க விகுதியாகப் பத்துப்பாட்டில் 22 இடங்களில் பயின்று வந்துள்ளது என்று தி.அ. இரமேஷ் குறிப்பிடுகின்றார் (சங்க இலக்கியச் சொல்லாக்க நெறிமுறைகள் (பத்துப்பாட்டு) ப.114). அதன் அடிப்படையில் புறநானூற்றை நோக்கும் பொழுது எட்டுச் சொற்கள் மட்டும் ஆக்கம் பெற்றுள்ளன. அவை பின்வருமாறு

அதிர் +அல் > அதிரல் (காட்டு மல்லிகை) (புறம்.269:1)

அணி + அல் > அணியல் (அழகு செய்தல்) (புறம்.1:5)

அரி + அல் > அரியல் (கள்) (புறம்.209:4)

புடை + அல் > புடையல் (மாலை) (புறம்.99:5)

அதிர் என்னும் வினையடியுடன் அல் சேர்ந்து காட்டு மல்லிகை என்னும் பொருளில் ஆக்கம் பெற்றுள்ளது. அதேபோன்று தான் கீழ் உள்ள சொற்களும் ஆக்கம் பெற்றுள்ளன. மேலும் பாய் + அல் > பாயல் (படுக்கை) (புறம்.245:5), சுரி + அல் > சுரியல் (சுருள்) (புறம்.307:6), கோடு + அல் > கோடல் (காந்தள்) (புறம்.157:7), அணங்கு + அல் > அணங்கல் (வருந்த) (புறம்.211:14) போன்ற சொற்களும் புறநானூற்றில் ஆக்கம் பெற்றுள்ளன.

**அன் விகுதி**

இலக்கண நூல்களில் விகுதியாக இடம்பெற்றுள்ள ‘அன்’ விகுதிக்கும் சொல்லாக்கத்தில் இடம்பெறும் ‘அன்’ விகுதிக்கும் வேறுபாடு உள்ளது. இலக்கண நூல்களில் வருவது திரிபு நிலையில் சொற்களை ஆக்கிப் பொருள் மாற்றம் இன்றி இலக்கண அமைப்பில் மாற்றம் செய்வதாகும். ஆனால் சொல்லாக்கத்தில் பயன்படும் ‘அன்’ விகுதி பொருள் மாற்றத்துடன் சொற்களை ஆக்கும் பெயராக்க விகுதி எனலாம்.

இதன் அடிப்படையில் புறநானூற்றில் உள்ள சொற்களைத் தொகுத்து நோக்கும் பொழுது, கடம்பு + அன் > கடம்பன் (குடி மரபினன் ஒருவன்) (புறம்.385:7) என்பது போன்று சில சொற்கள் மட்டும் ஆக்கம் பெற்றுள்ளன.

**இ விகுதி**

‘இ’ என்பதை விகுதியாகத் தொல்காப்பியரும் (தொல்.சொல்.225) நன்னூலாரும் (நன்.140) குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியர் முன்னிலை ஒருமை வினைமுற்று ஈறாகவும் நன்னூலார் பெயரினும் சில என்று கூறுமிடத்தும் ‘இ’ விகுதியாக வழங்கப்பட்டுள்ளது.

இ. மறைமலை அவர்கள் “பொற்கோ குறிப்பிடும் மூடி, கொள்ளி, நொண்டி ஆகிய சொற்களைப் போல வினையடியும் இகர விகுதியும் சேர்ந்து உருவாகிய சொற்கள் ஆட்சித்துறை சொல்லாக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவு உள்ளன (இ. மறைமலை, சொல்லாக்கம், ப.60)” என்பார் என்று சுட்டுகின்றார். இதன் அடிப்படையில் நோக்கும் பொழுது புறநானூற்றில் இதுபோன்ற சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன.

அதாவது, அதர், எவ்வு, கனல், களர், கோள், புணர், வார், விளர், விறல் ஆகிய சொற்களுடன் ‘இ’ விகுதி சேர்ந்து முறையே அதர் + இ > அதரி (கடா) (புறம்.373:26), எவ்வு + இ > எவ்வி (ஒரு வள்ளல்) (புறம்.24:18), கனல் + இ > கனலி (கதிரவன்) (புறம்.41:6), களர் + இ > களரி (காடு) (புறம்.356:1), கோள் + இ > கோளி (பூவாது காய்க்கும் மரம்) (புறம்.58:2), புணர் + இ >

புணரி (அலை) (புறம்.2:10), வார் + இ > வாரி (வருவாய்) (புறம்.330:5), விளர் + இ > விளரி (இரங்கற்பண்) (புறம்.260:2), விறல் + இ > விறலி (விறல்பட பாடி ஆடும் பெண்) (புறம்.60:5) முதலிய சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளதைப் புறநானூற்றில் காணமுடிகிறது.

**வினையடியுடன் சேரும் விகுதிகள்**

**நர் விகுதி**

இலக்கண நூல்களில் ‘நர்’ விகுதி வெளிப்படையாகக் குறிப்பிடப்பட வில்லை. இருப்பினும் விகுதி வகைகளைப் பட்டியலிட்டுக் காட்டும் நன்னூலார் குறிப்பிட்ட விகுதிகளை வகைப்படுத்திக் கூறிவிட்டு, காலமாற்றத்திற்கு ஏற்ப விகுதிகளின் வளர்ச்சி மாறும் என்பதால் பிறவும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனாலும், ‘நர்’ விகுதி சங்க இலக்கியங்களிலேயே பரவலாக்கம் பெற்ற ஒன்றாக இருக்கையில் ஏன் பவணந்தியார்; உள்ளிட்ட இலக்கணிகள் அதை விகுதியாகப் பதிவு செய்யவில்லை என்ற கேள்வி மேலோங்குகிறது.

‘நர்’ விகுதி பற்றி இ. மறைமலை ச. இராசேந்திரன், பொற்கோ போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். இவ்விகுதி வினையடிகளுடன் மட்டும் சேர்ந்து பெயர்ச்சொற்களை உருவாக்குகின்றது. இக்கருத்துக்களின் அடிப்படையில் புறநானூற்றுப் பாடல்களை நோக்கும் பொழுது, ஈகு என்ற வினையடியுடன் ‘நர்’ விகுதி சேர்ந்து ஈகு + நர் > ஈகுநர் (கொடுப்போர்) (புறம்.235:17) என்னும் சொல் ஆக்கம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

தற்காலத்தில் ஓட்டுநர், நடத்துநர், இயக்குநர் போன்ற சொற்கள் ‘நர்’ விகுதி சேர்ந்து ஆக்கம் பெற்று மக்கள் வழக்கில் இடம்பெற்றுள்ளதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

**ப்பு விகுதி**

தொழிற்பெயர் விகுதியாகவும் தெரிநிலை வினையெச்ச விகுதியாகவும் ‘ப்பு’ பயின்று வரும் என்பது நன்னூலார் கருத்து. ஆனால், ஆக்கப் பெயர் விகுதியாகச் ச. அகத்தியலிங்கம், ச. இராசேந்திரன், ஆ. வேலுப்பிள்ளை, எச். சித்திரபுத்திரன் ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

இவர்களின் விகுதி பகுப்பு அடிப்படையில் புறநானூற்றில் உள்ள சொற்களை அணுகும் பொழுது சில சொற்கள் இவ்விகுதியின் துணையுடன் ஆக்கம் பெற்றுள்ளன என்பதை அறியலாம். அவை பொரு + ப்பு > பொருப்பு (மலை) (புறம்.33:7), விளர் + ப்பு > விளர்ப்பு (வெண்மை) (புறம்.253:4), வை + ப்பு > வைப்பு (ஊர்) (புறம்.2:11) என்பனவாகும்.

**வை விகுதிகள்**

‘வை’ என்பதைத் தொழிற்பெயர் விகுதிகளில் ஒன்றாக நன்னூலார் குறிப்பிடுகின்றார். சொல்லாக்க முறையில் இவ்விகுதி ஆக்க விகுதியாகப் பயன்பாட்டில் உள்ளதைப் பல அறிஞர்கள் சுட்டியுள்ளனர். அவர்களின் கருத்துப்படி புறநானூற்றில் உள்ள சொற்களை அணுகும் பொழுது

தேய் + வை > தேய்வை (சந்தனக்கட்டை) (புறம்.369:19), அரி + வை > அரிவை (பெண்) (புறம்.122:9), உழு + வை > உழுவை (புலி) (புறம்.33:9) போன்ற சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன.

**பெயர் மற்றும் வினையுடன் சேர்ந்து வரும் விகுதிகள்**

**ச்சி விகுதி**

இலக்கண நூலாசிரியர்கள் ச்சி என்பதை விகுதியாகக் குறிப்பிடவில்லை. இருப்பினும் நன்னூலார் பிறவும் என்று விகுதிகள் பற்றிக் கூறுமிடத்துக் குறிப்பிட்டுச் சென்றுள்ளதால் ச்சி என்பதை ஆக்கப்பெயர் விகுதியாகச் சொல்லாக்கச் சிந்தனையாளர்கள் வகைப்படுத்தியுள்ளனர். அவர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு புறநானூற்றில் உள்ள சொற்களை ஆராயும் பொழுது பத்துக்கும் மேற்பட்ட சொற்கள் ச்சி விகுதி இணைவால் ஆக்கம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

அடை, கணி போன்ற சொற்களுடன் ச்சி விகுதி இணைந்து அடை + ச்சி > அடைச்சி (சேர்த்து) (புறம்.370:24), கணி + ச்சி > கணிச்சி (மழுப்படை) (புறம்.42:22) ஆகிய சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன.

**நிறைவுரை**

புறநானூற்றில் ஆக்க விகுதிகளாக அகம், அம், அல், அர், அன், இ, ஐ, ச்சி, ப்பு, வை, நர் ஆகியவை இடம்பெற்றுள்ளன. அவற்றைப் பெயருடன் சேர்ந்து வரும் விகுதிகள், வினையடியுடன் சேர்ந்து வரும் விகுதிகள், பெயர் மற்றும் வினையுடன் இணைந்து வரும் விகுதிகள் என்னும் மூன்று நிலைகளில் காணமுடிகின்றது. அதேபோன்று புறநானூறு எழுதப்பட்ட காலச்சூழலில் சொற்களின் பயன்பாடு எவ்வாறு இருந்துள்ளது என்பதையும் சொற்களின் வளர்ச்சி பற்றிய தெளிவையும் பெறமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


- அகத்தியலிங்கம், ச., மொழியியல், சொல்லியல், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1971.
- அன்பழகன், க., சங்க இலக்கிய ஒருபொருட் பல சொல்லாக்கத்தில் விகுதிகள், தொல்காப்பியம் சங்கத் தமிழ் ஒரு புதிய பார்வை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 2006.
- இரமேஷ், தி.அ., சங்க இலக்கியச் சொல்லாக்க நெறிமுறைகள் (பத்துப் பாட்டு), சென்னைப் பல்கலைக்கழகம், 2013.
- தொல்காப்பியர், தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.
- பொற்கோ, இலக்கண உலகில் புதிய பார்வை, தமிழ் நிலையம், சென்னை, 1985.

- பவணந்தி முனிவர், நன்னூல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
- புறநானூறு மூலமும் உரையும் (தொகுதி 1,2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98, 2007.